2015 செப்டம்பர் 14] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*செயல்படுத்தி வருகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டில் 4,900 ரூபாய் மதிப்புடைய மடக்கு சக்கர நாற்காலி மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,410 ரூபாய் மதிப்புடைய சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் 47 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில், 911 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சாதாரண மடக்கு சக்கர நாற்காலிகள் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்ட நபர்களின் சிறப்புத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும்வகையில் இல்லை. தற்போது, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்யேகமாக வழங்கக்கூடிய உதவி உபகரணங்கள் ஏதுமில்லை. எனவே, முதுகுத் தண்டு வடம், நரம்பு உறை தேய்வு நோய் மற்றும் தண்டுவட குறைபாடு நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என 20,000 ரூபாய் மதிப்பீட்டில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, ஒரு மாவட்டத்திற்கு 30 எண்ணிக்கையில் மொத்தம் தமிழ்நாட்டில் 960 நபர்களுக்கு 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் இவை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-10*

## (ஆ) பாரத் நெட் திட்டத்தை மாநில அரசுமூலம் நிறைவேற்றுதல், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்மூலம் இணைய தொலைக்காட்சி வசதி மற்றும் கூடுதல் இ–சேவை வசதிகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையிலும், உலகமே உள்ளங்கையில் என்னும் வகையிலும் விளங்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் விதமாக, பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 14

*1. அனைத்து மாநிலங்களிலும் உள்ள கிராம ஊராட்சிகளை* Optical Fibre *மூலமாக இணைத்து அரசின் சேவைகளை இணையம் மூலமாகப் பொது மக்கள் பெற்று பயன்பெறும் வகையில் "பாரத் நெட்" என்ற திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டம் தமிழகத்தில் தமிழ்நாடு அரசின் மூலமாகத்தான் செயல்படுத்தப்பட வேண்டும் என நான் வலியுறுத்தியதன் அடிப்படையில், மத்திய அரசு இத்திட்டத்தினைத் தமிழகத்தில் தமிழ்நாடு அரசே செயல்படுத்திட ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும்* Optical Fibre *மூலம் இணைக்கப்பட்டு தமிழக அரசின் பல்வேறு சேவைகளை பொது மக்கள், தங்கள் கிராமங்களில் இருந்தே இணையம் மூலமாகப் பெற்று பயனடையும் வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினை 3,000 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழக அரசே செயல்படுத்தும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென "தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன்"* (Tamil Nadu FibreNet Corporation) *என்ற ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் 11-8-2014 அன்று "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாக அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணையதள சேவைகள் வழங்கப்படும்" என நான் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகத்திடமிருந்து, தமிழ்நாடு முழுவதும் அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணையதள சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான உரிமத்தினைப்* (ISP Licence) *பெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணையதள சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக இந்திய ரெயில்டெல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. முதற்கட்டமாக சுமார் 552 உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்கள்மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இச்சேவைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு*

வருகின்றன. இதன் சேவைத் திறன் மற்றும் செயல்பாடு குறித்து அரசு கேபிள் டிவி நிறுவனம் மிக கவனமாக ஆய்வு செய்து வருகிறது. "பாரத் நெட்" மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளும் இணைக்கப்பட உள்ளதால், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கெனவே பெற்றுள்ள Internet Service Provider உரிமத்தினைப் பயன்படுத்தி "இல்லந்தோறும் இணையம்" என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து இல்லங்களுக்கும் குறைந்த செலவில் தரமான இணைய இணைப்புகளை வழங்கிடும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் மற்றும் இதர இணையதள சேவைகள் ஆகியவற்றுடன் சேர்த்து, புதிதாக "இணைய வழி தொலைக்காட்சி" சேவைகளும் (Internet Protocol Television - IPTV) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-15*

3. பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படைத் தேவைகளை நன்குணர்ந்த எனது தலைமையிலான அரசு, இ-சேவை மையங்கள் வழியாக அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, மின் மாவட்ட சேவைகள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான அரசு சார்ந்த பிற சேவைகள் இம்மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை அனைத்து மாவட்டங்களுக்கும் 2014 ஆம் ஆண்டு பிப்ரவரியில் விரிவாக்கம் செய்து நான் துவக்கி வைத்தேன். தற்போது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், புதுவாழ்வு திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கிராமப்புற ஏழ்மை குறைப்புக் குழு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகியவற்றின் மூலமாக அமைக்கப்பட்ட 10,034 இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்படும் சான்றுகள், ஓய்வூதியம் மற்றும் சமூக நலத் துறையின் சேவைகளான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் கல்வி உதவி சார்ந்த சேவைகள் உள்ளிட்ட 36 சேவைகள் இம்மையங்களின்மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்ட பின், இதுவரை சுமார் 70 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2015-2016 ஆம் ஆண்டில்

*இ-சேவை மையங்கள்மூலம் தற்போது அரசுத் துறைகளால் வழங்கப்பட்டுவரும் சேவைகளுடன், கூடுதலாக மேலும் 300 சேவைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இ-சேவை மையங்கள் மூலமாக இந்தக் கூடுதல் சேவைகளை வழங்கிட அரசுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.*

*மேற்கூறிய திட்டங்கள்மூலம் தகவல் தொழில்நுட்பத்தின் பயன் பொது மக்களைச் சென்றடைய வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. புதுக்கோட்டை காது கேளாதோர் பள்ளிக்குக் கட்டடம், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி.மூலம் இணைய தொலைக்காட்சி மற்றும் கூடுதல் இ—சேவை வசதிகள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) நான் உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) இது முடிந்தவுடன் கூப்பிடுகிறேன். முக்கியமான அறிவிப்பு, நன்றி சொல்கிறார்கள். அது முடிந்தவுடன் நான் உங்களைக் கூப்பிடுகிறேன்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடின்றி பிறத்தல் அரிது என அவ்வை பிராட்டி மொழிந்தார். கூன், குருடு, செவிடாகப் பிறந்தாலும்கூட தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பார்வையற்றவர்களுக்கு ஒளியாகவும், பேச முடியாதவர்களுக்கு ஒலியாகவும், நடக்க முடியாதவர்களுக்கு வழியாகவும், கேட்க முடியாதவர்களுக்கு ஒலியாகவும்; கண் அற்றவர்களுக்கு பார்வையாக, கேட்க முடியாதவர்களுக்கு செவியாக இருந்து, இப்படி மாற்றுத்திறனாளிகளுக்கு பல கோடி நலத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள்.*

*அதைப்போலவே, இன்றைக்கு உலகத்தில் மடிக்கணினி வந்துவிட்ட பின்னாலே உலகமே உள்ளங்கைக்கு வந்துவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளெல்லாம்கூட இன்றைக்கு அந்த உள்ளங்கையிலே தமிழகத்தை அறிய, உலகத்தை அறிய (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பம்மூலம்*